Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.164/2022 Date:27.03.2026
Deposition of witness for prosecution: PW6 ( LW14 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சிலைமணி | Village | இராமநாதபுரம் |
| Father/ Husband Name | கரும்பன் | Taluk | இராமநாதபுரம் |
| Age | 61/2026 | Calling | ஆய்வாளர்(ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.03.2026 TIME 05.45 **PM**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 30.05.2022–ம் தேதி உத்தமபாளையம் காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது, உத்தமபாளையம் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் இப்ரீம் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் இருந்த வந்த தகவலை பெற்று அங்கு சென்று விபத்தில் இறந்து போன விக்னேஷ் என்பவரின் தம்பி சக்திகுமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நிலைய குற்ற எண். 169/22 இதச பிரிவு 279, 337, 304(A) ஆக வழக்கு பதிவு செய்து. வழக்கு கோப்பினை விசாரணைக்காக என்னிடம் சமர்ப்பித்தார். எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 06.00 மணிக்கு சம்பவம் இடம் பார்வையிட்டு சாட்சிகள் முத்து, ராஜீவ்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்று விபத்தில் இறந்த நபரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்பு இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சிகள் சக்திகுமார், ஜெயந்தி, செல்வகுமார், ராஜீவ்கண்ணன் , முத்து, மாரியப்பன், லெட்சுமணன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தலைமை காவலர் தாமரை மாணிக்கம் என்பவர் மூலம் உடற்கூறாய்வுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். 30.05.2022–ம் தேதி 14.35 மணிக்கு இவ்வழக்கில் காயம்பட்டு மேல்சிகிச்சைக்கு சென்றிருந்த செல்வி என்பவர் சிகிச்சை பலனிற்றி இறந்துவிட்டார் என தகவல் கிடைத்த பின்பு வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவு 279, 337, 304(A) இருந்து இதச பிரிவு 279, 304(A) (2 Counts) ஆக மாறுதல் செய்தேன். பின்பு 31.05.2022–ம் தேதி காலை11.00 மணிக்கு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பெண் முதல்நிலை காவலர் மணிமேகலை என்பவர் மூலம் உடற்கூறாய்வுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து

அனுப்பினேன். 01.06.2022–ம் தேதி 14.45 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். வழக்கில் சம்மந்தப்பட்ட TN 07 CD 7732 என்ற பதிவெண் கொண்ட Maxi Cape Van மற்றும் TN 60 BZ 7652 Hero Honda Splender இருசக்கர வாகனத்தையும், தனித்தனி வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சுந்தரராமன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன். பின்னர் இறந்து போன விக்னேஷ் என்பவருக்கு பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திரு. வேதமூர்த்தி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, சான்றிதழ் பெற்றேன். பின்னர் இறந்து போன செல்வி என்பவருக்கு பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திரு. இளவேனில் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, சான்றிதழ் பெற்றேன். தலைமை காவலர் தாமரை மாணிக்கம், மணிமேகலை சிறப்பு சார்பு ஆய்வாளர் இபரீம் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி மீது வழக்கு விசாரணை முடித்து 25.07.2022 ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5**, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6, 7**, பிரேத விசாரணை அறிக்கைகள் முறையே **அ.சா.ஆ.8**,**9** உடற்கூறாய்வு சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.10, 11** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.12**, ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

விபத்தில் இறந்து போன செல்வி மற்றும் விக்னேஷ் ஆகியோர் அம்மா, மகன் ஆவார்கள். அசா.1 சக்திகுமார் விபத்தில் இறந்து போன செல்வியின் மற்றொரு மகன் ஆவார். விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து 30.05.2022–ம் தேதி புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த விக்னேஷ் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 ஐ நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 அளித்த புகாரினை நான் பார்வையிட்டேனா என்றால் அதன் நகலை பார்வையிட்டேன். அ.சா.1 கொடுத்த புகாரில் எனது அண்ணன் ஓட்டி வந்த Bike மோதியதில் எனது அண்ணனுக்கு காயம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) *புகாரில் எனது அண்ணன் மோதிய வாகனத்தின் ஓட்டுநர் பற்றி விசாரிக்க* என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்த செந்தில்குமார் என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். சம்பவ இடத்தில் தடுப்பு சுவர் உள்ளது என்றால் சரிதான். அசா.2 சம்பவம் இடம் அருகே பெட்டி கடை வைத்துள்ள நபர் என்றால் சரிதான். இரவு நேரத்தில் கடை திறந்து வைத்திருக்க காவல்துறை அனுமதி வேண்டும் என்றால் சரியல்ல. அ.சா.4 செல்வகுமார் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் வழக்கில் ஆஜராகும் எதிரி அல்ல என சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. பொதுவாக ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டும் நபருக்கு சாலை விதிகள் பற்றி தெரியாது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன விக்னேஷ் என்பவர் உரிய ஓட்டுநர் உரிமமின்றி இரவு நேரத்தில் வாகனத்தை ஓட்டி வந்து எதிரியின் வாகனம் மீது அவராகவே மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து இறந்த போன விக்னேஷ் என்பவரின் கவனக்குறைவாக

ஏற்பட்டது என்றாலும், இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.